10th March 1966]

நகரப் பஞ்சாயத்து இருக்கும் இடங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்துள்ள இடங்களில் உள்ள பணியாளர்களுக்கும் ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்தக் கேள்வியிலிருந்து இந்த உபகேள்வி எழாது.

சிதம்பரம் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துகள்

* 236 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா, சிதம்பரம் தாலுகாவில் இருக்கும் பஞ்சாயத்துகள் எத்தனை ?

(இ) அந்தப் பஞ்சாயத்துகளில் பிரசிடெண்டாக அங்கம் வகிக்கும் ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) 261.

(*b*) 46.

Evening classes for Law Course

* 237 *Q.*—SRI S. NANJUNDA ROW : }
SRI M. KARUNANITHI : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to conduct evening classes in the Madras Law College for Law Degree Course, for the benefit of the Government servants and others; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It is proposed to start the course with effect from 1966–67.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரியில் சட்டப் படிப்பு படித்து, பட்டம் பெற நிர்ணயித்துள்ள கால அளவு என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓராண்டு அதிகமாக இருக்கும். கல்லூரியில் சேர்ந்து படிக்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற வேண்டியிருக்கிறதோ அதை விட ஓர் ஆண்டு அதிகமாக இருக்கும்.

SRI S. NANJUNDA ROW : Will the Government impress upon the new Madurai University to start evening colleges for Law in Madurai District ?

[10th March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no question of Government impressing on the University. It is for the University to consider.

திரு. சா. கணேசன் : *இந்த சட்டப்படிப்பு மாலை நேரத்திலே பயிலுவதற்கு உரிய வாய்ப்பு கொடுக்கும்போது, இது பள்ளிக்கு வந்து படிப்பதோடு பள்ளிக்கு வெளியிலே இருந்தும் படிக்க வாய்ப்புக் கொடுக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லையா? எக்ஸ்டெர்னல் ஸ்டுடென்ட்ஸ் என்ற முறையில் அனுமதிக்கும் நோக்கம் உண்டா? அப்படியானால் எந்த முறையை அதிலே கையாள உத்தேசித்திருக்கிறார்கள்?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *மாலை நேர வகுப்பிலே கல்லூரியிலே சேர்ந்து வகுப்புக்கு வந்து குறிப்பிட்ட நேரத்தில் பாடம் படிக்கிறார்கள். அவர்களும் கல்லூரிக்கு வருகிறார்கள். சாதாரணமாக கல்லூரிக்கு வந்து கல்லூரியிலே சேர்ந்து படிக்க முடியாதவர்களுக்கு மாலை நேர வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேறு துறையிலே வேலை பார்க்கிறவர்கள், அவர்கள் சட்டத்தில் பட்டம் பெறாதவர்கள், சட்டத்தில் பட்டம் பெற விரும்புகிறவர்கள், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று, வேறு உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு மாலை நேர வகுப்பு ஏற்பாடு செய்து, அதில் அவர்கள் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.*

SRI C. CHIRANJEEVULU NAIDU: How many students will be admitted into these evening colleges?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: For F.L. course there will be one hundred students and the admission will be restricted to the *bona fide* students who can satisfy the authorities that by virtue of their being in employment they are unable to join the regular course.

திரு. வை. சங்கரன் : *சார், இது தினம் எத்தனை மணி நேரம் வகுப்புகள் நடப்பதாக இருக்கும்? எஃப். எல்.-க்கு எத்தனை ஆண்டு காலம்? பி.எல்.-க்கு எத்தனை ஆண்டு காலம்?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *நான் முன்பே சொன்னேன். சாதாரணமாக எத்தனை ஆண்டு இருக்கிறதோ அதை விட ஓர் ஆண்டு அதிகமாக இருக்கும் என்று சொன்னேன். மாலைப் பொழுதில் எவ்வளவு நேரம், என்ன நேரம் என்பதையெல்லாம் கல்லூரி நிர்ணயித்துக்கொள்ளும்.*

திரு. செ. மாதவன் : *தலைவர் அவர்களே, இந்த மாலை வகுப்புகளில் சேரக்கூடியவர்கள் உத்தியோகத்தில் இருக்கவேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. உத்தியோகத்தில் இல்லாதவர்கள் கூட, உதாரணத்திற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட, சேர வாய்ப்பு இருக்கிறது, அவர்களும் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் இந்த மாலை வகுப்புகளில் சேருவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?*

10th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உத்தியோகத்தில் இல்லாதவர்கள் முழு நேரக் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும். அதற்காகத் தான் அப்படி முழு நேரக் கல்லூரி வைத்திருக்கிறோம். இல்லையென்றால் அதை எடுத்து விடலாம். உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு உத்தியோகத்தையும் விட முடியாது, படிக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது என்பதற்காகத் தான் மாலை நேர வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும் என்று வைத்திருக்கிறோம்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மாலை நேரத்தில் படிக்கும் அரசாங்க ஊழியர்கள் சட்டப் படிப்பு முடிகிற வரையில் வேறு இடங்களுக்கு மாற்றப்பட மாட்டார்கள் என்று அரசாங்கம் உறுதி அளிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். அம் மாதிரி உறுதி பொதுவாக அளிக்க முடியாது.

கலைக் கல்லூரிகள்

* 238 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடுத்த கல்வியாண்டில் தமிழகத்தில் புதிய அரசாங்கக் கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எத்தனை, எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுள்ளன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Six Colleges one each at Thanjavur, Karur, Virudhachalam, Tiruvannamalai, Dindigul and Tiruppur are proposed to be started during 1966–67.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப் படும் கலைக் கல்லூரிக்கு முதல் தவணையாக எவ்வளவு பணம் கட்ட வேண்டும் ? வட சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற கல்லூரிக்கு ஏதாவது கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதல் தவணை மட்டுமல்ல. புதிதாகக் கல்லூரி ஆரம்பிக்க 5 லட்சம் ரூபாய் கட்டி விடவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். நான் முன்பே கூறியது போல வட சென்னை கல்லூரிக்கு இது வரையில் ஒன்றும் கொடுக்கவில்லை. 5 லட்சம் ரூபாய் வசூலித்துக் கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள் சிலர். கிடைக்கும் என்றே நம்புகிறேன், எதிர்பார்க்கிறேன்.